மதுரை தெற்கு மாவட்டம் உசிலம்பட்டியில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன் ஆகியோர் மாவட்ட துணைச் செயலாளர் வக்கீல் ஆர். பாலாஜி, மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி. அஜித்பாண்டி ஏற்பாட்டில் ரூபாய் 25 லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் உள்ளனர்.

இனமான பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்தநாள் முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமான பேராசிரியர் பெருந்தகையார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்வில் பத்மநாபன்,தங்கவேலு,சீனிவாசன், பரமகுரு,செண்பக விநாயகம், சரவணன்,ராஜதுரை, மனோகரன்,புனிதா, லாலா சங்கரபாண்டியன், கடற்கரை,பூசை பாண்டியன், பெரியதுரை,கிறிஸ்டோபர், பால்ராஜ்,வெள்ளத்துரை, ராமச்சந்திரன்,பிரகாஷ், அந்தோணிசாமி,குருசாமி, வழக்கறிஞர் பிச்சையா, உதயகுமார்,பசுபதி பாண்டியன், முப்புடாதி,மைக்கேல் நெல்சன், மகாராஜன்,ராஜராஜன்,ராஜ், கார்த்தி,அன்சாரி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

ரூ.1.82 கோடியில் புதுப்பிக்கப்பட்டது! தென்காசி மாவட்டம்!

குற்றாலத்தில் - திரு.வி.க. தொழிலாளர் ஓய்வு இல்லம்!

அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்தார்!

தென்காசி.டிச.20. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க நேற்று முன்தினம் 18.12.2024 தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் அமைப்பு சார் தொழிலாளர்கள்,அவர்கள் குடும்பத்தினர்கள் மற்றும் பொதுமக்கள் பயன் பயன் பாட்டிற்காக ரூபாய் 1.82 கோடி மதிப்பீட்டில் புதுப் பிக்கப்பட்ட திரு. வி.க.தொழிலாளர் ஓய்வு இல்லத்தினை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் அமைப்புசார் தொழிலாளர்கள், அவர்கள் குடும்பத்தி னர்கள் மற்றும் பொதுமக்களின் பயன் பாட்டிற்காக ரூபாய் 1.82 கோடி மதிப்பீட்டில் புதுப் பிக்கப்பட்ட திரு. வி.க.தொழிலாளர் ஓய்வு இல்லத்தினை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் கொ.வீர ராகவ ராவ்,தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனர் பா.விஷ்ணு சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனிநாடார் (தென்காசி)ஈ.ராஜா (சங்கரன்கோவில்) சதன் திருமலைகுமார் (வாசுதேவநல்லூர்) தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தாவது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் திரு.வி.க.இல்லம் எனும் தொழிலாளர்களுக்கான ஓய்வு இல்லம் 1983 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த திரு.வி.க. தொழிலாளர் ஓய்வு இல்ல வளாகம் 2 ஏக்கர் பரப்பளவு கொண்டது.இவ்விடத்தில் 2 படுக்கைகள் கொண்ட 8 அறைகள், 8 படுக்கைகள் கொண்ட 7 பொதுஅறைகள்,24 படுக்கையில் கொண்ட பொதுஅறை ஒன்று என மொத்தம் 96 நபர்கள் தங்கி பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகிறது.இந்த ஓய்வு இல்லத்தை அனைத்து தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதனைத் தொடர்ந்து திரு.வி.க.இல்ல கட்டிடத்தில் பொதுப்பணித்துறை மூலம் ரூபாய் 1,82,17,500 செலவில் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப் பட்டு அமைப்புசார் தொழிலாளர்கள், அவர்கள் குடும்பத்தினர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தைச் சார்ந்த 26 பயனாளிகளுக்கு ரூபாய் 10,85,000 ம் மதிப்பிலான கல்வி,திருமணம், இயற்கை மற்றும் விபத்து மரணம் ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது.கடந்த மூன்று ஆண்டுகளில் 30,134 தொழிலாளர்களுக்கு ரூபாய் 12.54 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

இந்தியாவிற்கு எடுத்துக் காட்டாக திராவிட மாடல் ஆட்சி நடத்தும் முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார். தொழிலாளர்கள் தான் நாட்டின் முதுகெலும்பு குழந்தைகள், முதியவர்கள் தவிர அனைவருமே பணியாற்றிக் கொண்டுதான் இருக்கிறோம்.குற்றாலம் திரு.வி.க.இல்லம் பராமரிப்பின்றி காணப்பட்டது. சென்னை மகாபலிபுரம், வால்பாறை,குற்றாலம் ஆகிய இடங்களில் தொழிலாளர் ஓய்வு இல்லங்கள் உள்ளது.

மேலும் இந்த அரசு லட்சக்கணக்கான தொழிலாளர்கள் நலன் காக்கின்ற அரசாக செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தார்.

நிகழ்வில் நெல்லை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர் செந்தில் குமாரி,மதுரை கூடுதல் தொழிலாளர் ஆணையர் உமாதேவி, நெல்லை தொழிலாளர் இணை ஆணையர் சுமதி,தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் அன்பு ராஜன் மற்றும் தொழிலாளர் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டம்

கொடுமுடி ஆறு நீர்த்தேக்கத்திலிருந்து பிசான பருவ சாகுபடிக்குத் தண்ணீர்!

சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்தார்! மாவட்ட ஆட்சியர் முன்னிலையில்!

நெல்லை.டிச.19. நெல்லை மாவட்டம் கொடுமுடி ஆறு நீர்த்தேக்கத்திலிருந்து பிசான பருவ சாகுபடிக்காக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப. கார்த்திகேயன் முன்னிலையில் தண்ணீர் திறந்து வைத்தார்.

பின்னர் பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தாவது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடுமுடியாறு நீர் தேக்கத்திலிருந்து நாங்குநேரி மற்றும் இராதாபுரம் வட்டங்களில் உள்ள வள்ளியூரான்கால் படலையார் கால்,ஆத்துக்கால் மற்றும் வடமலையான்கால் ஆகிய வற்றின் மூலம் நேரடி பாசனம் பெறும் 936.90 ஏக்கர் மற்றும் 44 குளங்கள் வாயிலாக மறைமுக பாசனம் பெறும் 4844.01 ஏக்கர் ஆக மொத்தம் 5780.91 ஏக்கர் ஆக மொத்தம் 5780.91ஏக்கர் நிலங்களுக்கு 2024 ஆம் ஆண்டு பிசான பருவ சாகுபடி செய்வதற்கு 18.12.2024 முதல் 31.03.2025 வரை 101 நாட்களுக்கு வினாடிக்கு 100 கன அடி அளவுக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம் கொடுமுடியாறு நீர்த்தேக்கத்தி லிருந்து பிசான பருவ சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

நெல்லை மாவட்டம் களக்காடு அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் 52.50 அடி கொள்ளவு கொண்ட கொடுமுடியாறு அணை உள்ளது. தற்போது நீர் இருப்பு 45 அடியாக உள்ளது.

தாமிரபரணி ஆறு,நம்பியாறு மற்றும் கருமேனியாறு வெள்நீர் கால்வாய் திட்டம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கனவுத் திட்டம்.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் கடந்த 10 ஆண்டு காலம கிடப்பில் போடப்பட்டது.ஒன்றிய அரசிடம் இருந்து ஒரு பைசா கூட வராத நிலையில் மீண்டும் தி.மு.க.ஆட்சியில் இந்த திட்டம் நிறைவேற்றப் பட்டு கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பாபநாசம்,மணிமுத்தாறு,கன்னடியான் அணைகளில் இருந்து உபரி நீர் வெளியேற்றாத நிலையிலும் மாவட்ட ஆட்சியர் மற்றும் நீர்வளத்துறையின் முயற்சியில் தற்போது வெள்ள நீர் கால்வாயில் 1200 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சியிலேயே திட்டம் கொண்டு வரப்பட்டு தி.மு.க. ஆட்சியிலேயே திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் மருத்துவ கழிவுகளை கொட்டியவர்களை பிடிப்பதற்காக சிறப்ப குழு அமைக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்துள்ளார்.இனி இதுபோன்ற சம்பவம் நடக்காது.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கண்காணிப்பு பொறியாளர் சிவகுமார், களக்காடு நகர்மன்ற துணை தலைவர் ராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக்,ஒன்றிய செயலாளர்கள் ஆரோக்கிய எட்வின்,ஜோசப் பெல்சி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர் உள்பட அரசு அலுவலர்கள் விவசாய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளியில் தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் புதிய அரசினர் தொழில் பயிற்சி நிலைய துவக்க விழாவில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் தலைமையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து, மாணவ மாணவிகளுக்கு சேர்க்கைக்கான ஆணைகளை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., என்.கே.ஆர்.சூரியகுமார், டி.சாமுடி, உமாசந்திரன், வெண்மதி முனிசாமி, சசிகலா சூரியகுமார், எம்.சிங்காரவேலன், தனபால், தேசிங்குராஜா, திருப்பதி, ஆனந்தன், காந்தி மற்றும் கழகத்தினர், பொதுமக்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு-

வாகை சந்திரசேகர் வேண்டுகோள்!

சென்னை, டிச. 20 - கழக கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு மாநிலத் தலைவர் வாகை சந்திரசேகர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: -

நில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதற்கு இணங்க மாநில அளவிலான ஒப்பித்தல் போட்டி வரும் 4.1.2025 அன்று அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற உள்ளது.

இதனை பள்ளிகளுக்கு தெரி விக்கவும், மேலும், போட்டி நடத்தாமல் உள்ள மாவட்டங் களில் நடத்தி முடித்திடவும் வேண்டுகிறேன்.

மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட மூன்று மாணவர்களையும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் காலை 9 மணிக்குள் அரங்கத்திற்கு அழைத்து வர வேண்டுகிறேன்.

இவ்வாறு தலைவர் - கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கையில் கேட்டுக்கொண் டுள்ளார்.

தாட்கோ மாவட்ட மேலாளர்கள் ஆய்வுக் கூட்டம்

அமைச்சர் மா.மதிவேந்தன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, டிச. 20 - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர்.மா.மதிவேந்தன் தலைமையில் சென்னை தாட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கத்தில் தாட்கோ மாவட்ட மேலாளர்கள் மற்றும் செயற் பொறியாளர்களுடன் தாட்கோவில் நடைபெற்றுவரும்திட்டப்பணிகளின் செயல்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் (18.12.2024) ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து அவர்களின் கல்வி அறிவு மற்றும் சமூக பொருளாதார நிலையினை உயர்த்திட முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக முதலமைச்சரின் ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு (CM ARISE) திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய கடன் உதவி, இளைஞர்களுக்கான சுயதொழில், மற்றும் வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், மேலும் ஏழை எளிய விவசாய மகளிரின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட நன்னிலம் நிலம் உடமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மற்றும் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளை மாவட்ட மேலாளர்களுடன் ஆய்வு நடத்தினார்.

தாட்கோவில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர் பள்ளிகள், விடுதிகள், மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்திடவும், நவீன சமுதாயக் கூடங்கள் பணிகளையும் ஒன்றிய அரசு நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறும் அமைச்சர் மா.மதிவேந்தன் கேட்டுக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழக தலைவர் உ.மதிவாணன் , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசு செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழக மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி மற்றும் அனைத்து மாவட்ட மேலாளர்கள், செயற்பொறியாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆந்திரா கே.ஏ.முனுசாமி
டிசம்பர் 20 (2016)

எட்டு வயதிலேயே சுயமரியாதைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அஞ்சா நெஞ்சராக உருவாகி, தி.மு.கழகம் துவங்கப்பட்ட ஒரு சில மாதங்களிலேயே, பல எதிர்ப்புகளை மீறி, ஆந்திர மாநிலத்தில் சில மாவட்டங்களில் கழகத்தின் கிளைகள் துவக்கி கழகக் கொடி ஏற்றி வைத்தவர்.

ஆந்திர மாநிலத்தில் பல மாவட்டங்களில் 1954 முதல் 1971 வரை 500க்கும் மேற்பட்ட கிளைக் கழகங்களைத் தொடங்கியதோடு, 1966ஆம் ஆண்டு ஆந்திர மாநிலப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலக் கழக அமைப்பாளராக இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பொறுப்பு வகித்தவர்.

2007ஆம் ஆண்டு, ஈரோட்டில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் அண்ணா விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தேவதானம்பட்டி தே.க. இராஜேந்திரன்
டிசம்பர் 20 (1996)

கழகம் தொடங்கிய காலம் முதல் உறுப்பினராகி, நாடகத்தின் மூலம் கழகக் கொள்கைகளைப் பரப்பி, தீவிர கழகப் பணியாற்றியவர்.

தேவதானப்பட்டி கிளைச் செயலாளராகவும் – பேரூர்க் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தேவதானப்பட்டி பேரூராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.